மெட்ரோ ரெயில் பணி முடிந்ததும்

# அண்ணாசாலை மே மாதம் முதல் மீண்டும் இருவழிப்பாதையாகிறது

சென்னை, மார்ச். 27–அண்ணாசாலையில் சுரங்க மெட்ரோ ரெயில் பணிகடந்த7 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது.

இறுதிக்கட்ட பணி

இதற்காக அண்ணாசாலையில் எல்.ஐ.சி. முதல் ஆயிரம் விளக்கு வரை ஒருவழிப் பாதையாக மாற்றப்பட்டது. இதனால் வாகனங்கள் மாற்றுப்பாதையில் திருப்பி விடப்பட்டன.

தற்போது மெட்ரோ ரெயில் பணிகள் இறுதி கட்டத்தை எட்டி உள்ளன. மெட்ரோ ரெயில் நிலையங்களுக்கான நுழைவு வாயில்கள் அமைக்கும் பணிமும் முரமாக நடந்து வருகிறது. ஏப்ரல் மாதம் இறுதிக்குள் இப்பணிகள் முடிவடைய உள்ளது.

மீண்டும் இருவழிப்பாதை

இதையொட்டி மே மாதம் 2–வது வாரத்தில் அண்ணா சாலையில் எல்.ஐ.சி. முதல் ஆயிரம்விளக்கு வரையிலான சாலை பகுதி மீண்டும் இருவழிப்பாதையாக மாற்றப் படுகிறது.

இதற்காக அங்கு அமைக்கப்பட்டு இருந்த தடுப்புகள் அகற்றப்பட்டு சாலை விரிவாக்கம் செய்யப்படுகிறது.

அண்ணாசாலையில் புதிய தார் சாலை அமைக்கப்பட உள்ளது. மே மாதம் முதல் இருவழிப்பாதை வாகன போக்குவரத்து தொடங்கப் படுகிறது.

இது குறித்து மெட்ரோ ரெயில் அதிகாரி கூறியதாவது:–

அண்ணாசாலை

முதல்கட்ட மெட்ரோ ரெயில் திட்டத்தில் அண்ணா சாலையில் இருந்து வண்ணாரப்பேட்டை வரையிலான 10 கிலோ மீட்டர் தூர மெட்ரோ ரெயில் பணிக்காக எல்.ஐ.சி. முதல் ஆயிரம்விளக்கு வரை ஒருவழிப்பாதையாக மாற்றப் பட்டது.

தற்போது மெட்ரோ ரெயில் பணிகள் நிறைவடைந்து வருகிறது. பயணிகளுக்கான நுழைவு, வெளியேறும் பகுதி அமைக்கும் பணிகள் மும்முரமாக நடந்து வருகிறது.

ஏப்ரல் மாதம் இறுதிக் குள் இந்த பணிகள் முடிவடைகிறது. அதன்பிறகு எல்.ஐ.சி. முதல் ஆயிரம்விளக்கு வரையிலான சாலை புதுப்பிக் கப்படுகிறது.

மே மாதம் முதல் அண்ணா சாலை மீண்டும் இருவழிப் பாதையாக மாற்றப்படுகிறது. கார், மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட வாகன ஓட்டிகள் இந்த சாலையினை மகிழ்ச்சிகரமாக மீண்டும் பயன்படுத்தலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.